# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.82/2017
# Deposition of P.W.1

Name : செந்தில் குமார்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:19.04.2023**
**(Accused present)**
**முதல் விசாரணை-**

நான் திற்பரப்பு, பக்த பெரியத்துவிளையில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். தேவராஜ் என்பவர் எனது மாமா ஆவார். எனது மாமா தேவராஜ்க்கும் அவரது மச்சான் ஜெபமணி என்பவருக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. மேற்படி சொத்து பிரச்சனை சம்மந்தமாக எனது மாமா தேவராஜ் பத்மனாபபுரம் நீதிமன்றத்திற்கு வந்த போது எனது மாமாவை எதிரி முருகன் என்பவர் வெட்டினார். அதன் பிறகு எனது மாமா தேவராஜால் நடக்க இயலாது. எனவே எனது மாமா தேவராஜின் வழக்குகளை நான் தான் பார்த்து வந்தேன். 20.02.2010 அன்று வழக்கறிஞர் திரு. அல்போன்ஸ் அவர்களை எனது மாமா தேவராஜ் அவர்களின் வழக்கு சம்மந்தமாக பார்க்க வந்தேன். மேற்படி வழக்கறிஞரை அன்று பார்த்து விட்டு இரவு 09-00 மணியளவில் நான் வீடு திரும்புவதற்காக தக்கலை பழைய பேரூந்துநிலையம் அருகே உள்ள கல்லறை தோட்டம் பக்கம் வந்த போது எதிரி முருகன் கையில் வெட்டுக்கத்தியை வைத்து என்னை பார்த்து எங்கள் சொத்தை அபகரித்தது போதாது என்று கேஸ் கொடுக்க வருகிறாயா என்று கூறி தள்ளையலழி என்று கெட்டவார்த்தை பேசி இதோடு செத்து தொலைந்து போ என்று கூறி எனது தலையில் வெட்டுக்கத்தியை வைத்து பலமாக வெட்டினான். நான் இடது கையால் அதை தடுத்து கீழே குனிந்த போது எனது இடது முழங்கையில் வெட்டுப்பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. நான் குனியாமல் இருந்திருந்தால் வெட்டு எனது தலையில் பட்டு காயம் ஏற்பட்டு நான் இறந்து போய் இருப்பேன். எதிரி மீண்டும் என்னை வெட்ட முயற்சித்த போது பக்கத்தில் இருந்த

ஆட்கள் வந்து எதிரியை பிடிக்க முயற்சி செய்த போது எதிரி எனது சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.2000/-த்தை எடுத்துக் கொண்டார். பின்னர் எதிரியை அங்கிருந்த ஆட்டோ ஓட்டுனர்கள் மற்றும் மக்கள் பிடிக்க முயற்சித்த போது அவர்களை பார்த்து எதிரி கையில் வைத்திருந்த வெட்டுக்கத்தியை காண்பித்து என்னை பிடிக்க வந்தால் வெட்டி துண்டாக்கி விடுவேன் என்று மிரட்டினார். அதனால் பிடிக்க வந்தவர்கள் ஓடி விட்டார்கள். பின்னர் நான் தக்கலை காவல்நிலையத்திற்கு இரணியல் ரோடு வழியாக வந்து புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் தக்கலை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஆகும். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் வெட்டுக்கத்தி சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய வெட்டுக்கத்தி ஆகும். அது சா.பொ.1. என்னிடம் காண்பிக்கப்படும் 5 செருப்புகளில் 1 ஜோடியாக உள்ள செருப்பு மட்டும் சம்பவத்தின் போது நான் அணிந்திருந்தது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 500 ரூபாய் நோட் ஒன்று, 100 ரூபாய் நோட் ஒன்று, 20 ரூபாய் நோட் ஒன்று, 10 ரூபாய் நோட் ஒன்று, 5 ரூபாய் நோட் ஒன்று ஆகியவை வழக்கு சம்பவத்தின் போது எனது சட்டை பாக்கெட்டில் இருந்து எதிரி எடுத்த என்னுடைய பணம் ரூ.2000/-த்தின் ஒரு பகுதி ஆகும். மேற்படி நோட்டுகள் முறையே சா.பொ. 2 முதல் சா.பொ.6. காவல் நிலையத்தில் நான் புகார் மனு கொடுத்த பிறகு என்னை மருத்துவ சிகிச்சைக்காக தக்கலை போலிசார் தக்கலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்பவமாக தக்கலை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சாட்சி தேவராஜ் எனது மாமா ஆவார். அவரது வீடு அருமனை அருகே உள்ள முழுக்கோடு. எதிரிக்கும், எனது மாமனாருக்கும் இடையில் சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குச் சம்பவ இடத்திற்கும் அருமனை என்ற இடத்திற்கும் இடையில் சுமார் 20 கி.மீ துாரம் இருக்கும். ஜெபமணி என்பவர் தேவராஜின் உடன் பிறந்த சகோதரியின் கணவர் ஆவார். மேற்படி ஜெபமணி எனது தாயாரின் உடன் பிறந்த தங்கையின் கணவர் ஆவார். தேவராஜ் ஜெபமணியின் மீது தாக்கல் செய்திருந்த எந்த உரிமையியல் வழக்குகளிலும் நான் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரரண செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் பார்வை

மகஜர், அத்தாட்சி , கைது நமூனா, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றில் கையொப்பமிட்டுள்ள சாட்சிகள் அருமனையை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியின் ஊர் திற்பரப்பு ஆகும். திற்பரப்பில் இருந்து வழக்கு சம்பவ இடம் சுமார் 18 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். திற்பரப்பிலிருந்து தக்கலை வரக்கூடிய அனைத்து பேருந்துகளும் தக்கலை காமராஜர் பேருந்து நிலையம் வந்து தான் பிறகு நாகர்கோவில் செல்ல வேண்டும் என்றால் சரிதான். தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்திலிருந்து தக்கலை பழைய பேருந்து நிலையம் சுமார் 1/2 கி.மீ தூரம் உள்ளது என்றால் சரிதான். தக்கலை காவல் நிலையத்திலிருந்து வழக்கு சம்பவ இடம் 100 மீட்டர் துூரத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று திற்பரப்பிலிருந்து தக்கலைக்கு பேருந்தில் தான் வந்தேன். வழக்கு சம்பவத்தன்று வழக்கறிஞர் திரு. அல்போன்ஸ் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து இரவு 08.00 மணிக்கு சந்தித்தேன். மேற்படி வழக்கறிஞர் அலுவலகத்தை தாண்டி தான் கிழக்கு திசையில் சம்பவ இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் அலுவலகத்திலிருந்து நான் திற்பரப்பு செல்ல பேருந்தில் ஏறுவதற்கு பழைய பேருந்து நிலையம் வரவேண்டியதில்லை என்றும் எனவே, சம்பவ இடத்திற்கு நான் வரவேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் நான் திற்பரப்பு செல்வதற்கு பழைய பேருந்து நிலையத்திலிருந்து செல்ல இயலும் என்பதால் பழைய பேருந்து நிலையம் வந்தேன். சம்பவத்தன்று வழக்கறிஞர் அலுவலகம் செல்ல எனது வீட்டிலிருந்து என்னுடன் வேறு யாரும் வரவில்லை. நான் மட்டும் தான் வந்தேன். வழக்கு சம்பவத்தன்று என்னை தக்கலை போலிசார் விசாரணை செய்தார்கள். காவல் ஆய்வாளர் விசாரணை விசாரணை செய்தாரா? காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தாரா? அல்லது காவலர் விசாரணை செய்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை புகார் கொடுத்து அன்று விசாரணை செய்தார்கள். அன்றைய தினம் எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்று ஞாபகமில்லை. இரணியல் ரோடு வழியாக தக்கலை காவல் நிலையம் வரவேண்டும் என்றால் பாரதி நகர் வழியாக தான் வர இயலும் என்றால் சரிதான். மேற்படி வழி 1/2 கி.மீ தூரம் ஆகும். நான் தான் புகார் மனுவை காவல்நிலையத்தில் வைத்து எழுதி னேன். புகார் மனுவில் நான் குனியா விட்டால் எதிரி வெட்டிய வெட்டால் நான் இறந்து போயிருப்பேன் என்றும் எதிரி என்னை மீண்டும் வெட்ட முயற்சித்தார் என்றும் கூறியுள்ளேன். எனக்கு வழக்கு சம்பவத்தின் போது ஏற்பட்ட காயம் வெட்டுக்காயம் ஆகும். தக்கலை

காவல் நிலையத்திலிருந்து எனது தம்பி சிந்து குமார் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு என்னுடன் சுரேஷ் குமார் என்பவர் வந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் இன்று நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்த ஒரு ஜோடி செருப்பு உள்ளிட்ட என்னிடம் இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட 5 செருப்புகள் தோல் செருப்புகள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்த போது சம்பவத்தின் போது என்னுடைய செருப்பு தவறி விட்டதாக நான் கூறவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. சம்பவ இடத்தின் அருகே ஆட்டோ ஸ்டான்ட் இருந்தது. அதில் ஆட்டோ உடன் அதன் ஓட்டுனர்கள் இருந்தார்கள். மேற்படி ஆட்டோ ஸ்டான்டில் இருந்த ஆட்டோ ஓட்டுனர்கள் வழக்கு சம்பவத்தை பார்த்தார்கள். சம்பவ இடத்தின் அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகில் உள்ள கடைகள் அனைத்தும் திறந்து இருந்து வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த கடைகள் என்றால் சரிதான். மேற்படி கடையில் உள்ள நபர்களும் வழக்குச் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்திருக்கலாம். வழக்குச் சம்பவத்தை நிறைய நபர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். நான் காவல்நிலையம் செல்வதற்கு முன்பு வழக்குச் சம்பவ இடத்திற்கு போலிசார் வரவில்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனது மாமா தேவராஜ் புகார்தாரராக இருந்து பல குற்றவியல் வழக்கு போலிசார் மூலம் எதிரியின் மீது தாக்கல் செய்து அதில் நான் சாட்சியாக இருந்துள்ளேன் என்றும், நான் புகார்தாரராக இருந்து பல குற்றவியல் வழக்குகள் போலிசார் மூலம் எதிரியின் மீது தாக்கல் செய்து அதில் எனது மாமனார் தேவராஜ் சாட்சியாக இருந்துள்ளார் என்றும் சொன்னால் சரிதான். அவற்றில் அனைத்து வழக்குகளிலிருந்தும் எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் எனது மாமனாரை தக்கலை நீதிமன்றத்தின் முன்பு வைத்து எதிரி வெட்டிய வழக்கில் எதிரிக்கு விசாரணை நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதை தவிர மற்ற குற்றவியல் வழக்குகளில் என்ன தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. மேற்படி தண்டனை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட வழக்கில் நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். 04.11.2008 அன்று நானும் எனது தம்பி சிந்து குமாரும், எனது தகப்பனார் நாகப்பன், எனது மாமானார் தேவராஜ், தேவராஜின் மகன் ஆகியோர் எதிரி முருகனை கொடிய ஆயுதங்களால் தாக்கி எதிரிக்கு உடம்பில் 5 பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும், ஜெபமணி என்பவருக்கு தலையில் கொடுங்காயமும், விலா எலும்பில் எலும்பு முறிவு

வயிறை வெட்டி குடல் சரிந்தும், இரண்டு கால்களிலும் கரண்டையில் வெட்டி கால் தொங்கக்கூடிய அளவிற்கு கொடுங்காயங்களும் ஏற்படுத்தினோம் என்றும் மேற்படி வழக்கு தற்போதும் பத்மனாபபுரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2 ல் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருவது உண்மை, ஆனால் அது பொய் வழக்காகும். தேவராஜின் தூண்டுதலால் எதிரியின் மீது குலசேகரம் காவல் நிலையத்தால் பல பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பே எதிரியை போலிசார் கைது செய்தார்கள் என்றும், எனவே எதிரியின் மனைவி உஷா குமாரி நாகர்கோவில் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சோதனை கட்டளை பிறப்பிக்கக் கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றும், அதனால் எதிரியை கொற்றிகோடு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து மீண்டும் தக்கலை காவல் நிலையத்திற்கு கொண்டு தவறாக எதிரியை தக்கலை காவல் நிலையத்தில் அடைத்து வைத்து விட்டு என்னிடமிருந்து பொய்யான புகாரை பெற்று இப் பொய் வழக்கு எதியின் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி வழக்குச் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், எதிரி என்னை வெட்டுக்கத்தி கொண்டு வெட்டவில்லை என்றும், வேண்டுமென்றே ஒரு பொய் புகாரை வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதி தக்கலை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எனவே, தான் வழக்கு சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்கள் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை என்றும் 25 கி.மீட்டருக்கு அப்பால் உள்ள தேவராஜ் ஊரில் உள்ள அவருக்கு வேண்டிய நபர்கள் சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ளனர் என்றும் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சா.பொ.1 க்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.